C - தனது குடும்பத்தவரில் எவரையும் கலீபாவாக நியமிக்க வேண்டாம் எனக் கட்டளையிட்டவர்.

D - ஸகீபா பனீ ஸாஇதாவில் ஸஹாபாக்களால் ஏகமனதாக கலீபாவாகத் தெரிவு செய்யப்பட்டவர்.

E - காலித் இப்னு வலீத் (ரழி) அவர்களைப் பொதுத் தளபதியாக நியமித்து யர்மூக்கிற்கு அனுப்பியவர்.

F - மஜ்லிஸுஸ் சூராவை ஒரு தனிச் சபையாக நிறுவியவர்.

இவற்றுள் கலீபா அபூபக்கர் (ரலி) அவர்களுடன் மாத்திரம் தொடர்புடையவற்றை தொகுத்தெடுத்தால் வரும் சேர்மானத் தொகுதியை தெரிவு செய்க.

(1) A, D, E (2) B, C, D (3) B, E, F (4) C, E, F (5) C , D, E

**19.** இப்னு பதூதா அவர்கள் இலங்கையில் தரிசித்துச் சென்ற இடங்களைச் சுட்டும் தொகுதி

(1) சிலாபம், குருணாகல், கண்டி

(2) புத்தளம், பாவா ஆதம் மலை, காலி

(3) புத்தளம், பேருவளை, கொழும்பு

(4) மன்னார், பாவா ஆதம் மலை, பேருவளை

(5) சிலாபம், கண்டி, நீர்கொழும்பு

**20.** பின்வரும் **"அ"** பகுதி தப்ஸீர் நூல்களையும், **"ஆ"** பகுதி முபஸ்ஸிரீன்களின் பெயர்களையும் காட்டுகின்றது.

| "அ" பகுதி | | | "ஆ" பகுதி |
|---|---|---|---|
| (i) ஜாமிஉல் பயான் | A | - | இமாம் அபூ ஹய்யான் |
| (ii) மபாதிஹுல் கைப் | B | - | பக்ருத்தீன் அர்ராஸி |
| (iii) அல் - பஹ்ருல் முஹீத் | C | - | இமாம் ஆலூஸி |
| (iv) தப்ஸீர் ஜலாலைன் | D | - | இமாம் அத்தபரி |
| (v) ரூஹுல் மஆனி | E | - | ஜலாலுத்தீன் ஸுயூதி |

பகுதி "அ" இல் குறிப்பிடப்பட்டுள்ள தப்ஸீர்களை, "ஆ" பகுதியிலுள்ள முபஸ்ரீன்களுடன் சரியாக பொருத்தினால் அமையும் விடைத்தொகுதி

(1) A B C D E (2) A C B E D (3) B C E A D (4) D B A E C (5) D E B A C

**21.** அனுராதபுரத்தின் மேற்கு வாயில் பகுதி "யோனாஸ்" களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது என்று மகாவம்சம் குறிப்பிடும் கருத்து, எந்த மன்னனின் காலத்திற்கு உரியதாகும்.

(1) வலகம்பா (2) அக்ரபோதி (3) தாதோபதிஸ்ஸ (4) தாதுசேன (5) பண்டுகாபயன்

**22.** பின்வரும் கூற்றுக்களுள் இஜ்திஹாத் தொடர்பான சரியான கூற்று.

(1) இஸ்லாமிய ஷரீஆ, அகீதா முதலாம் அனைத்துத் துறைகளிலும் இஜ்திஹாத் இடம் பெற முடியும்.

(2) நபி (ஸல்) அவர்கள் காலத்தில் இருந்தே இஜ்திஹாதுக்கான தூண்டுதல்கள் காணப்பட்டன.

(3) ஸஹாபாக்கள் காலத்தில் அல்குர்ஆனிலிருந்து மட்டுமே இஜ்திஹாத் மேற்கொள்ளப்பட்டது.

(4) இஜ்திஹாத் செய்யும் தரத்தை அடைவதற்கு பன்மொழித் தேர்ச்சி அவசியமாகும்.

(5) ஸஹாபாக்கள் காலத்தில் கலீபா அலி (ரழி) அவர்கள் தவிர்த்து முதன் மூன்று கலீபாக்களும் இஜ்திஹாத் மேற்கொண்டனர்.

**23.** ஹதீஸ் வகைப்படுத்தலில் "முன்கதி.'." எனப்படுவது.

(1) ஒரு ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசையில், ஸஹாபியை விட்டு, ஒரு தாபிஈ நேரடியாக நபி (ஸல்) அவர்களிலிருந்து அறிவிப்பது

(2) ஒரு ஹதீஸின் இஸ்னாத் தாபிஈ வரை சென்று அவரோடு நின்று விடுவது

(3) அறிவிப்பாளர் ஒழுக்கநெறியுள்ளவராக இருப்பது

(4) ஓர் இஸ்னாதின் நடுப்பகுதியில் ஓர் அறிவிப்பாளர் விடுபடுவது

(5) ஹதீஸ் அறிவிப்பாளர் வரிசையில் ஸஹாபி விடுபடுவது

**24.** கீழே சில ஆளுமைகளும் அவர்களின் சேவைகளும் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகச் சரியானதைத் தெரிவு செய்க.

| | | |
|---|---|---|
| (1) ஔரங்கஸீப் | --- | மஜல்லதுல் அஹ்காமில் அத்லிய்யா |
| (2) கலீபா அபூபக்ர் (ரழி) | --- | ஜெரூஸலம் வெற்றி |
| (3) அலி பின் ஸீனா | --- | அல் ஹாவி |
| (4) நிழாமுல் முல்க் | --- | ஜாமிஉல் அஸ்ஹர் |
| (5) கலீபா மன்ஸூர் | --- | தாருல் ஹிக்மா |

**25.** கீழுள்ள **A, B, C** கூற்றுக்களை வாசித்து விடை தருக.

A. மேற்கில் இஸ்லாமிய பண்பாட்டையும் நாகரிகத்தையும் அறிமுகப்படுத்தி, அதன் அறிவியல் வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் ஸ்பெயின் முஸ்லிம் ஆட்சியாளர்களாவர்.

B. ஸுன்னாவைப் பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாக அஸ்மாஉர் ரிஜால், இல்முல் ஜரஹ் வத்த.்.தீல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

C. ஸ்பெயினின் குர்துபா மஸ்ஜித், முதலாம் அப்துர் ரஹ்மானினால் ஆரம்பிக்கப்பட்டு இரண்டாம் ஹிஷாமினால் பூரணப்படுத்தப்பட்ட மஸ்ஜிதாகும்.

(1) A, B, C மூன்றும் சரியானவை.
(2) A, B சரியாக இருப்பதுடன் C தவறானது.
(3) A, B, C மூன்றும் தவறானவை.
(4) A சரியாக இருப்பதுடன் B உம் C யும் தவறானவை.
(5) B உம் C யும் சரியாக இருப்பதுடன் A தவறானது

**26** முதல் **30** வரையான ஒவ்வொரு வினாவிலும் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அக்கூற்றுகள் பற்றிய மிகப் பொருத்தமான தொடர்பைக் காட்டும் சரியான விடையினைப் பின்வரும் அட்டவணையிலுள்ள இலக்கம் **(1), (2), (3), (4), (5)** என்பவற்றில் இருந்து தெரிவு செய்க.

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | சரியானது | பிழையானது |
| (3) | பிழையானது | சரியானது |
| (4) | பிழையானது | பிழையானது |
| (5) | சரியானது | சரியானதும் முதலாம் கூற்றை விளக்குவதுமாகும். |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **26.** | புலன்களின் மூலம் பெறப்படும் அனுபவமே அறிவு என்ற கருத்தைக் கிரேக்கர்கள் கொண்டிருந்தனர். | மனிதனுக்கான ஆன்மீக, ஒழுக்க அறநெறிக் கோட்பாடுகளை மனித அறிவால் மட்டும் பெற்றுக்கொள்ள முடியும். |
| **27.** | ஷரீஆ சில விடயங்களை தடைசெய்ததன் ஊடாகவும் மற்றும் சில விடயங்களை அனுமதித்ததன் ஊடாகவும் ஏற்படுத்த விரும்புகின்ற நன்நோக்குகளை மகாஸிதுஷ் ஷரீஆ குறிக்கின்றது. | மக்ஸத், மகாஸித், மஸாலிஹ், இலல், அஸ்ரார், நதாஇஜ், மஆல் போன்ற பதங்களின் பரிணாம வளர்ச்சியே மகாஸிதுஷ் ஷரீஆ எனப்படுகிறது. |
| **28.** | இலங்கை மன்னனால் டமஸ்கஸ் கலீபாவுக்கு அன்பளிப்புப் பொருட்களுடன் அனுப்பப்பட்ட கப்பல், இந்து சமுத்திரத்தில் கொள்ளையிடப்பட்டமை, முஸ்லிம்கள் சிந்து நோக்கி படையெடுப்பதற்கு ஒரு காரணமாக அமைந்தது. | தம்பதெனிய காலத்தில் மன்னன் தாதோபதிஸ்வின் விசுவாசத்துக்குரியவராகவும் வணிகத் துறை இணைப்பாளராகவும் பெரிய தம்பி மரிக்கார் செயற்பட்டார். |
| **29.** | சுன்னாவின் துணையின்றி அல்குர்ஆனை விளங்க முடியும் என்பது அஹ்லுல் குர்ஆன் வாதிகளின் கருத்தாகும். | அல்குர்ஆன் பல இடங்களில் இஜ்திஹாதுக்கு இடமளிக்கும் வகையில் அடிப்படைகள் சிலவற்றை முன்வைத்துள்ளது. |
| **30.** | அல்குர்ஆனை ஒன்று திரட்டியதன் காரணமாக கலீபா அபூபக்ர் (ரழி) அவர்கள் "ஜாமிஉல் குர்ஆன்" என்ற சிறப்புப் பெயரைப் பெற்றுள்ளார்கள். | அல்குர்ஆன் லௌஹுல் மஹ்பூலில் பாதுகாக்கப்பட்டு ரமழான் மாதமொன்றில் பைதுல் ஹிக்மாவுக்கு முழுமையாக இறக்கி வைக்கப்பட்டது. |

**31.** தப்ஸீர் - த.்.வீல் என்ற பதங்களுக்கான விளக்கம்
(1) தப்ஸீர் என்பது அல்குர்ஆனுக்கான விளக்கம்,
த.்.வீல் என்பது அல் ஹதீஸுக்கான விளக்கம்
(2) தப்ஸீர் என்பது மக்கி வசனங்களின் விளக்கம்,
த.்.வீல் என்பது மதனி வசனங்களின் விளக்கம்
(3) தப்ஸீர் என்பது அல்குர்ஆன் வசனங்களின் நேரடி விளக்கம்,
த.்.வீல் என்பது அல்குர்ஆன் வசனங்களின் மறைபொருள் விளக்கம்.
(4) தப்ஸீர் என்பது அல்குர்ஆன் வசனத்தை அல்குர்ஆன் வசனத்துடன் தொடர்புபடுத்தி விளக்குவது
த.்.வீல் என்பது அல்குர்ஆன் வசனத்தை அல் ஹதீஸ் வசனங்களுடன் தொடர்புபடுத்தி விளக்குவது
(5) தப்ஸீர் என்பது அல்குர்ஆன் வசனத்தை அல்குர்ஆன் வசனத்துடன் தொடர்புபடுத்தி விளக்குவது
த.்.வீல் என்பது அல்குர்ஆனுக்கு நவீன காலத்தில் வழங்கப்பட்ட விளக்கம்.

**32.** முஸ்லிம் உம்மத் பிரிந்து விடக் கூடாது என்பதைக் கருத்திற் கொண்டு கலகக்காரர்களின் அழுத்தத்திற்கு மத்தியில் கிலாபத்தைப் பொறுப்பேற்றுக் கொண்ட ஸஹாபி
(1) தல்ஹா (ரழி) (2) ஸுபைர் (ரழி) (3) அலி (ரழி)
(4) ஸ.்.த் இப்னு அபீ வக்காஸ் (ரழி) (5) அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி)

**33.** கருத்துவேறுபாடுகளின் போது பேண வேண்டிய ஒழுங்குகள் பற்றிய சரியான கூற்று
(1) தன்னைப் பற்றிய மேலெண்ணத்தை வளர்த்துக்கொள்ளல்
(2) விவாதித்து தனது கருத்தை உறுதிப்படுத்தல்
(3) தனது இமாமின் கருத்தில் நிலைத்து நிற்றல்
(4) தீவிரத்தைக் கைவிட்டு நடுநிலைப் போக்கைப் பின்பற்றல்
(5) இஜ்திஹாதுக்குரிய விடயங்களில் தனது கருத்தை முடிவாக வலியுறுத்தல்

**34.** அல்குர்ஆன் தொகுப்பின் போது சூரதுத் தௌபாவின் கடைசி வசனங்களை எழுத்து வடிவில் பாதுகாப்பாக வைத்திருந்த ஸஹாபி
(1) அபூ ஹுரைரா (ரழி) (2)அபூ குஸைமா (ரழி
(3) அபூ தல்ஹா (ரழி) (4) அபூ உபைதா (ரழி)
(5) அபூ ஜன்தல் (ரழி)

**35.** இஸ்லாம், மனிதனுக்கு வழங்கிய பணிகளுள் இபாதத், இமாரத் என்பவற்றுடன் மூன்றாவதாக அமைவது?
(1) விலாயத் (2) ரிஸாலத் (3) கிலாபத் (4) தஸ்கியத் (5) பராஅத்

**36.** அல்குர்ஆன் ஒரே தடவையில் முழுமையாக அருளப்படாமைக்கான பிரதான காரணம்
(1) எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள் குறைவாகக் காணப்பட்டமை
(2) த.்.வாப் பணியை இலகுபடுத்துவதுடன் மனதைத் திடமாக வைப்பது
(3) உடனுக்குடன் எழுத்தில் பதிந்து கொள்ள வசதிகள் கிடைக்காமை
(4) போராட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றமை
(5) காபிர்களின் தொடர்ச்சியான எதிர்ப்பு

**37.** "அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும் நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கின்றீர்கள்" என்ற அல்குர்ஆன் வசனம் சுட்டுவது
(1) கணவனையும் மனைவியையும் (2) மனைவியையும் குழந்தைகளையும்
(3) கணவனையும் குழந்தைகளையும் (4) பெற்றோர்களையும் பிள்ளைகளையும்
(5) ஆண்களையும் பெண்களையும்

**38.** பின்வருவன முஸ்லிம்களிடையே தோற்றம் பெற்ற சிந்தனைப் பிரிவுகள் சிலவற்றின் உட்பிரிவுகளாகும்.

A - வாஸிலிய்யா

B - இஸ்மாயீலிய்யா

C - பஷரிய்யா

D - ஸைதிய்யா

E - ஹிஷாமிய்யா

F - நுஸைரிய்யா

இவற்றுள் ஷீயாக்களின் உப பிரிவுகளைக் காட்டும் தொகுதி

(1) A, C, B (2) A, B, C (3) B, D, F (4) C, D, E (5) D, E, F

**39.** பின்வரும் **A, B, C** சுட்டும் தகவல்களைப் பரிசீலிக்குக.

A - மொஷபதேமிய நாகரிகம் எகிப்தில் தோற்றம் பெற்றதாகும்.

B - இந்தியாவில் தோற்றம் பெற்ற நாகரிகம் திராவிட நாகரிகம் எனப்படுகிறது.

C - உரோம நாகரிகம் எதென்ஸில் தோற்றம் பெற்றதாகும்.

D - இஸ்லாமிய நாகரிகம் இந்திய உப கண்டத்திலிருந்து பரவியதாகும்.

மேலுள்ளவற்றிலிருந்து சரியான தொகுதியைத் தெரிவு செய்க.

(1) A, B, C, D ஆகிய நான்கும் சரியானவை.

(2) B, C சரியாக அமைய A, D பிழையானவை.

(3) A, B சரியாக அமைய C, D பிழையானவை.

(4) A, B, C, D நான்கும் பிழையானவை.

(5) A, C, D பிழையாக அமைய B மட்டும் சரியாக அமைந்துள்ளது.

**40.** நிரல் **X** இல் சிற்றரசுகளின் பெயர்களும் **Y** இல் சிற்றரசுகள் காணப்பட்ட இடமும் தரப்பட்டுள்ளன.

| | X | Y |
|---|---|---|
| (i) | அக்லபி | A. ஆப்கான் |
| (ii) | கஸ்னவி | B. யெமன் |
| (iii) | பாதிமீக்கள் | C. மொரொக்கோ |
| (iv) | ஸியாதி | D. எகிப்து |
| (iv) | தாஹிரி | E. குராசான் |

**X** நிரலில் உள்ளவற்றை **Y** நிரலுடன் சரியாகப் பொருத்தினால் வரும் சேர்மானம்

(1) A C D E B (2) C A D B E (3) C A B D E (4) C E B A D (5) E C D A B

**41.** பின்வருவனவற்றைப் பரிசீலிக்குக

A - அல்லாஹ்வை மாத்திரமே வணங்குவோம்.

B - எப்போதும் பாவமன்னிப்புத் தேடுவோம்.

C - எவர்மீதும் அவதூறு சொல்ல மாட்டோம்.

D - அல்குர்ஆனை மனனமிடுவோம்.

E - திருடவோ விபசாரம் செய்யவோ மாட்டோம்.

F - சுன்னாவை எழுதிப் பாதுகாப்போம்.

நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத்துக்கு முன்னர் மதீனா வாசிகளோடு செய்து கொண்ட உடன்படிக்கைகளில் **அடங்காதது.**

(1) A, B, D (2) B, C, D (3) B, D, F (4) C, D, E (5) D, E, F

**42.** "முஜ்தஹித் முத்லக்" ஆகக் கணிக்கப்பட்டவர்களுள் ஒருவர்.

(1) இமாம் நவவி (றஹ்) அவர்கள்

(2) இமாம் முஸ்னி (றஹ்) அவர்கள்

(3) இமாம் சுயூத்தி (றஹ்) அவர்கள்

(4) இமாம் பைஹக்கி (றஹ்) அவர்கள்

(5) இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்கள்

**43.** சிந்து படையெடுப்பில் சம்பந்தப்பட்ட இரண்டு இராணுவப் பிரதிநிதிகளும் முறையே
(1) தாரிக் பின் ஸியாத் , முஹம்மத் பின் காஸிம்
(2) மூஸா பின் நுஸைர் , ஹஜ்ஜாஜ் பின் யூசுப்
(3) ஹஜ்ஜாஜ் பின் யூசுப் , தாரிக் பின் ஸியாத்
(4) மூஸா பின் நுஸைர் , முஹம்மத் பின் காஸிம்
(5) ஹஜ்ஜாஜ் பின் யூசுப் , முஹம்மத் பின் காஸிம்

**44.** ஒரு கியாஸை விட்டும் நீங்கி அதனை விடப் பலமான ஒரு கியாஸை நோக்கிச் செல்வதைக் குறிப்பது.
(1) கியாஸுல் அவ்லா
(2) இஸ்திஸ்ஹாப்
(3) மஸ்லஹா முர்ஸலா
(4) இஸ்திஹ்ஸான்
(5) உர்ப்

**45.** கீழே **X** பகுதியில் அறிஞர்களின் பெயர்களும் **Y** பகுதியில் அவர்கள் பங்களிப்புச் செய்த துறைகளும் ஒழுங்கின்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.

| | X | Y |
|---|---|---|
| (i) | குவாரிஸ்மி | A மருத்துவம் |
| (ii) | இப்னு ஸீனா | B தாவரவியல் |
| (iii) | இப்னு கல்தூன் | C கணிதம் |
| (iv) | அத்தீனாவாரி | D சமூகவியல் |
| (v) | அபூ உபைதா | E விலங்கியல் |

**X** இற்கமைய **Y** யை சரியாக ஒழுங்குபடுத்தினால் வரும் விடை

(1) A C D E B (2) B A D C E (3) C A D B E (4) C A E B D (5) E C D A B

**46.** இஸ்லாமிய வரலாற்றில் முதலாவது கப்பல் கட்டும் தொழிற்சாலையை நிறுவியவரும் அது நிறுவப்பட்ட இடமும்
(1) கலீபா அப்துல் மலிக் பின் மர்வான் - டியுனீஷியா
(2) கலீபா முஆவியா - டமஸ்கஸ்
(3) கலீபா உஸ்மான் - திரிப்பொலி
(4) கலீபா அப்துர் ரஹ்மான் - ஸ்பெய்ன்
(5) அம்ர் இப்னு ஆஸ் - எகிப்து

**47.** பின்வருவன இலங்கை முஸ்லிம்களுடன் தொடர்புபடுகின்ற சில கூற்றுகளாகும். அவற்றுள், மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) 4ஆம் விஜயபாகுவின் தளபதி, மித்த என்பவனால் மற்றொரு தளபதியான தாகூர் என்பவன் கொலை செய்யப்பட்டான்.
(2) நாடுகாண் பயணி இப்னு பதூதா கி.பி. 15ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு விஜயம் செய்தவராவார்.
(3) மகா பராக்கிரமபாகுவின் "அந்தரங்கதுர" எனப்பட்ட மேல் சபையில் 4 முஸ்லிம்கள் சேவை செய்துள்ளனர்.
(4) வஸ்துஹிமியின் தாய் மெதகெடிய குமாரிஹாமி என்பவர், அனுராதபுர மன்னனொருவரின் அந்தப்புரத்தில் இருந்த பெண்மணியாவாள்
(5) யாப்பகுவ கால மன்னனொருவரால் ஈராக்கிற்கு அனுப்பப்பட்ட தூதுக்குழுவுக்கு உஸ்மான் என்ற முஸ்லிம் தலைமை தாங்கியுள்ளார்.

**48.** மதீனாவில் இஸ்லாமிய சமூகமொன்றை நிறுவுவதற்கு அடித்தளமாக அமைந்த பிரதான செயற்பாடு
(1) மதீனா சாசனம்
(2) அவ்ஸ் - கஸ்ரஜ் இணக்கப்பாடு
(3) முஹாஜிர் - அன்சார் உறவு
(4) நஜ்ரான்வாசிகளுடனான ஒப்பந்தம்
(5) ஹுதைபிய்யா உடன்படிக்கை

**49.** மௌலானா இல்யாஸ் (றஹ்) அவர்களதும் மௌலானா மௌதூதி (றஹ்) அவர்களதும் தஜ்தீத் பணி தொடர்பான மிகச் சரியான கூற்று

(1) முதலாவமர் படித்த முஸ்லிம்களையும் இரண்டாமவர் பாமர முஸ்லிம்களையும் அணுகியமை

(2) முதலாமவர் இந்து கலாசார செல்வாக்கிற்குட்பட்ட முஸ்லிம்களையும் இரண்டாமவர் மேற்கத்தேய கலாசார செல்வாக்கிற்குட்பட்ட முஸ்லிம்களையும் அணுகியமை.

(3) முதலாமவர் மதம்மாறியவர்களையும் இரண்டாவமர் நாஸ்திகர்களையும் அணுகியமை

(4) முதலாமவர் அரசியலுக்கும் இரண்டாமவர் ஆன்மீகத்திற்கும் முக்கியமளித்து அணுகியமை

(5) முதலாமவர் நவீன பாணியிலும் இரண்டாமவர் மரபு வழியிலும் அணுகியமை

**50.** தஜ்தீத் என்பதன் கருத்து

(1) மார்க்கத்தின் ஓர் அம்சம் புழக்கத்திலிருந்து விடுபட்ட பின், அதனை ஆரம்பத்திலிருந்த நிலைக்கு மீட்டெடுத்தல்.

(2) மார்க்க விடயங்களை நவீன காலத்திற்கு ஏற்புடையதாய் மாற்றியமைத்தல்

(3) சமய விவகாரங்களில் சர்ச்சைக்குரிய விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுதல்

(4) மார்க்க சட்டப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை ஆரம்ப கால இமாம்களின் கருத்துக்களில் தேடிக் கண்டுபிடித்தல்

(5) சமய விவகாரங்களைச் சமயக் கண்ணோட்டத்திலும், லௌகீக விவகாரங்களை லௌஹீகக் கண்ணோட்டத்திலும் நோக்குதல்.

* * *

# (47) - இஸ்லாமிய நாகரிகம்

## வினாத்தாள் II

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி I இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி II இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

---

### பகுதி I.

**1.** (i) அல்லாஹ்வுக்கும் மனிதனுக்குமிடையிலான தொடர்பு வலுப்படுவதனால் மனிதனுக்குக் கிடைக்கும் பயன்கள் நான்கைக் குறிப்பிடுக.

(ii) பல்லின சமூகமொன்றில் சமூக நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் வகையில் ஒரு முஸ்லிம் கடைப்பிடித்தொழுக வேண்டிய நான்கு செயற்பாடுகளைக் குறிப்பிட்டு அவற்றுள் இரண்டை சுருக்கமாக விளக்குக.

(iii) குடும்பத்தை மையமாகக் கொண்டு நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தலில் ஒரு தாயின் பங்களிப்பைச் சுருக்கமாக விளக்குக.

(iv) சமய, சமூக நல்லிணக்கம் தொடர்பாக நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்கள் நான்கை உதாரணங்களுடன் குறிப்பிடுக.

(v) மனிதனுக்கும் அவனது நப்ஸுக்கும் இடையிலான தொடர்பை இஸ்லாமிய கண்ணோட்டத்தில் விளக்குக.

(5×4=20 புள்ளிகள்)

**2.** (i) நபிமார்களுக்கு வஹி அருளப்பட்ட நான்கு வழிமுறைகளைக் குறிப்பிடுக.

(ii) அல்குர்ஆன் படிப்படியாக அருளப்பட்டமைக்கான காரணங்களைப் பட்டியலிடுக

(iii) ஸஹாபாக்கள், அல்குர்ஆனை விளங்குவதற்கு கையாண்ட வழிமுறைகள் இரண்டை உதாரணங்களுடன் எடுத்துக்காட்டுக.

(iv) மருத்துவத் துறையில் முஸ்லிம்கள் ஈடுபாடு காட்டுவதற்குத் தூண்டிய காரணிகளைக் குறிப்பிடுக

(v) மத்தியகாலத்தைச் சேர்ந்த அல்குவாரிஸ்மி, அல்பிரூனி ஆகியோரின் புவியியற் துறைப் பங்களிப்பை மதிப்பிடுக

(5×4=20 புள்ளிகள்)

**3.** (i) இஸ்லாத்திற்கு முற்பட்ட இலங்கை - அரேபியா தொடர்பை எடுத்துக்காட்டுக

(ii) இலங்கையில் இஸ்லாத்தின் அறிமுகத்தோடு தொடர்பான வரலாற்று ஆதாரங்கள் இரண்டை விளக்குக.

(iii) சிங்கள மன்னர் காலத்தில் முஸ்லிம்களின் பொருளாதாரத் துறைசார்ந்த பங்களிப்புக்களை விபரிக்குக.

(iv) ஆரம்பகால கரையோர முஸ்லிம் குடியிருப்புக்கள் தோற்றம் பெற ஏதுவாக அமைந்த காரணிகள் நான்கைக் குறிப்பிட்டு அவற்றை உறுதிப்படுத்துவதற்கான இரு ஆதாரங்களை முன்வைக்க.

(v) கலீபாக்களான முஆவியா (றழி), ஜஃபர் அல் மன்ஸூர் ஆகியோர் முறையே உமையா, அப்பாஸிய கிலாபத்தை ஸ்தீரப்படுத்துவதில் மேற்கொண்ட நடவடிக்கைகளை ஒப்பிடுக.

(5×4=20 புள்ளிகள்)

## பகுதி II

**4.** (i) ஷரீஆ என்ற பதத்தையும் இஸ்லாமிய ஷரீஆவின் சிறப்பம்சங்களையும் விளக்குக.

(ii) மகாஸிதுஷ் ஷரீஆவின் மூன்று படிமுறைகளையும் சுருக்கமாக விளக்குக.

(2×10=20 புள்ளிகள்)

**5.** (i) இஸ்லாமிய சட்டத;துறையில் கருத்து வேறுபாடுகள் தோன்றுவதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு அவற்றுள் இரண்டினை விபரிக்குக.

(ii) கருத்துவேறுபாட்டின் போது பேணவேண்டிய ஒழுங்குகளை விளக்கமாக எடுத்துக்காட்டுக.

(2×10=20 புள்ளிகள்)

**6.** (i) அபூபக்கர் (றழி) அவர்கள் எதிர் கொண்ட சவால்களைக் குறிப்பிட்டு அவற்றை வெற்றி கொண்ட விதத்தை ஆராய்க

(ii) உமர் (றழி) அவர்கள் மேற்கொண்ட சீர்திருத்தப் பணிகளை விளக்குக.

(2×10=20 புள்ளிகள்)

**7.** (i) நபி (ஸல்) அவர்களின் மக்கா கால த.ஃவா அணுகுமுறைகளை விளக்குக

(ii) இஸ்லாத்தில் தஜ்தீத் பணியின் அவசியத்தை விபரிக்குக.

(2×10=20 புள்ளிகள்)

**8.** (i) அழகியல் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டத்தைக் குறிப்பிட்டு, அத்துறையில் முஸ்லிம்கள் ஈடுபாடுகாட்டியமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக.

(ii) நகர மற்றும் கோட்டை நிர்மாணத்தில் உமையா, அப்பாசிய கால முஸ்லிம்களின் பங்களிப்பை மதிப்பிடுக.

(2×10=20 புள்ளிகள்)

* * *

# (48) ග්‍රීක හා රෝම ශිෂ්ටාචාරය

## ප්‍රශ්න පත්‍ර ව්‍යුහය

**I පත්‍රය -** **කාලය : පැය 02යි.**

මෙම ප්‍රශ්න පත්‍රය I හා II වශයෙන් කොටස් **දෙකකින්** සමන්විත වේ.

**I කොටස**

මෙය ග්‍රීක හා රෝම ඉතිහාසය ආශ්‍රිත වරණ **5** බැගින් වූ බහුවරණ ප්‍රශ්න **30**කින් සමන්විත ය. එක් ප්‍රශ්නයකට ලකුණු **02** බැගින් ලකුණු **60**කි.

**II කොටස**

මෙය ග්‍රීක හා රෝම සාහිත්‍යය ආශ්‍රිත කෙටි පිළිතුරු සැපයීමේ ප්‍රශ්න **20**කින් සමන්විත ය. එක් ප්‍රශ්නයකට ලකුණු **02** බැගින් ලකුණු **40**කි.

I පත්‍රය සඳහා මුළු ලකුණු = 100

**II පත්‍රය -** **කාලය : පැය 03යි.** (ඊට අමතරව කියවීම් කාලය මිනිත්තු 10 යි.)

මෙම ප්‍රශ්න පත්‍රය I හා II වශයෙන් කොටස් **දෙකකින්** සමන්විත වේ.

**I කොටස - ග්‍රීක හා රෝම ඉතිහාසය**

මෙම කොටස ප්‍රශ්න **පහකින්** සමන්විත වේ. **පළමු** ප්‍රශ්නය **අනිවාර්ය** වන අතර ලකුණු **20**කි. සෙසු ප්‍රශ්න හතරෙන් ප්‍රශ්න **දෙකකට** පිළිතුරු සැපයිය යුතු වන්නේ එක් ප්‍රශ්නයක් ග්‍රීක ඉතිහාසයෙන් ද එක් ප්‍රශ්නයක් රෝම ඉතිහාසයෙන් ද වන සේ තෝරා ගනිමින් ය. එක් ප්‍රශ්නයකට ලකුණු 15 බැගින් ලකුණු 30කි.

**II කොටස - ග්‍රීක හා රෝම සාහිත්‍යය**

මෙම කොටස ප්‍රශ්න **හතරකින්** සමන්විත වේ. **හයවන** ප්‍රශ්නය **අනිවාර්ය** වන අතර ලකුණු **20**කි. සෙසු ප්‍රශ්න තුනෙන් ප්‍රශ්න **දෙකකට** පිළිතුරු සැපයිය යුතුය. එක් ප්‍රශ්නයකට ලකුණු 15 බැගින් ලකුණු 30**කි.**

II පත්‍රය සඳහා මුළු ලකුණු = 100

| | | | |
|---|---|---|---|
| අවසාන ලකුණ ගණනය කිරීම : | I පත්‍රය | = | 100 |
| | II පත්‍රය | = | 100 |
| | අවසාන ලකුණ | = | 200 ÷ 2 = 100 |

පෙර පැවති ප්‍රශ්න පත්‍ර ව්‍යුහයට අනුකූලව ප්‍රශ්න සකස් කෙරේ.

# (48) கிரேக்க உரோம நாகரிகம்

## வினாத்தாள்களின் கட்டமைப்பு

**வினாத்தாள் I** - **நேரம் : 02 மணித்தியாலங்கள்.**
இவ்வினாத்தாள் **I, II** ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும்.

பகுதி **I** - கிரேக்க உரோம நாகரிக வரலாறு பற்றிய **5** தெரிவுகளைக் கொண்ட **30** பல்தேர்வு வினாக்களைக் கொண்டதாகும்.
ஒரு வினாவுக்கு **02** புள்ளிகள் வீதம் **60** புள்ளிகள்.

பகுதி **II** - கிரேக்க உரோம இலக்கியம் பற்றிய **குறு விடைகள்** வழங்க வேண்டிய **20** வினாக்களைக் கொண்டதாகும். ஒரு வினாவுக்கு **02** புள்ளிகள் வீதம் **40** புள்ளிகள்.

வினாத்தாள் **I** இற்கான மொத்தப் புள்ளிகள் **100** ஆகும்.

**வினாத்தாள் II** - **நேரம் : 03 மணித்தியாலங்கள்.** (மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்)
இவ்வினாத்தாள் **I, II** ஆகிய **இரண்டு** பகுதிகளைக் கொண்டதாகும்.

பகுதி **I** - **கிரேக்க உரோம வரலாறு**
இப்பகுதி **5** வினாக்களைக் கொண்டது. **முதலாம்** வினா **கட்டாயமானது.** இதற்கான புள்ளிகள் **20** ஆகும். ஏனைய நான்கு வினாக்களில் **இரண்டு** வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். ஒரு வினாவை கிரேக்க வரலாற்றிலிருந்தும் இன்னொரு வினாவை உரோம இலக்கியத்திலிருந்தும் தெரிவு செய்க. ஒவ்வொரு வினாவுக்கும் **15** புள்ளிகள் வீதம் **30** புள்ளிகள்.

பகுதி **II** - **கிரேக்க உரோம இலக்கியம்**
இப்பகுதி **4** வினாக்களைக் கொண்டது. **ஆறாவது** வினா **கட்டாயமானது.** இதற்கான புள்ளிகள் 20 ஆகும். ஏனைய **மூன்று** வினாக்களில் **இரண்டு** வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். ஒரு வினாவுக்கு **15** புள்ளிகள் வீதம் **30** புள்ளிகள்.

வினாத்தாள் **II** இற்கான மொத்தப்புள்ளிகள் **100** ஆகும்.

இறுதிப் புள்ளியைக் கணித்தல் :
வினாத்தாள் I = 100
வினாத்தாள் II = 100
இறுதிப் புள்ளி = 200 ÷ 2 = 100

குறிப்பு : பழைய வினாத்தாள் கட்டமைப்புக்கு ஏற்ப வினாக்கள் தயாரிக்கப்படும்.

# (48) Greek and Roman Civilization

## Structure of the Question Paper

**paper I -** **Time : 02 hours**

This paper consists of two parts as part I and II

**Part I**

This contains **30** multiple choice questions with **5** options on Greek and Roman Histrory.

Each question carries **02** marks and the total mark is **60**.

**Part II**

This contains **20** short answer supply type questions on Greek and Roman Literature. Each question carries **02** marks and the total mark is **40**.

Total marks of paper I = 100

**paper II -** **Time : 03 hours** (In addition,10 minutes for reading.)

This paper consists of **two** parts as part I and II

**Part I - Greek and Roman History**

This part contains **five** questions. **First** question is **compulsory** and it carries **20** marks. Out of the four remaining questions,two questions have to be answered, selecting one from Greek History and one from Roman History. Each question carries **15** marks making a total of **30** marks.

**Part II - Greek and Roman Literature**

This part contains **four** questions. Question number **six** is **compulsory** and carries **20** marks. Out of the three remaining questions, **two** questions have to be answered. Each question carries **15** marks making a total of **30** marks.

Total marks of paper II = 100

Calculation of the final mark : Paper I = 100

Paper II = 100

Final marks = 200 ÷ 2 = 100

The questions will be set according to the previous structure.

# (49) கிறிஸ்தவ நாகரிகம்

## வினாத்தாள் கட்டமைப்பு

**வினாத்தாள் I** - **நேரம் : 02 மணித்தியாலங்கள்.**
**5** தெரிவுகளைக் கொண்ட **50** பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது.
**எல்லா** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். ஒரு வினாவிற்கு **01** புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் **50** ஆகும்.

**வினாத்தாள் II** - **நேரம் : 03 மணித்தியாலங்கள்.** (மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்)
இவ்வினாத்தாள் பகுதி I, பகுதி II என **இரு** பகுதிகளைக் கொண்டது.

**பகுதி I** - இப்பகுதி **மூன்று பகுதிக் கட்டமைப்பு வகை** வினாக்களைக் கொண்டது. அவற்றுள் ஏதாவது **இரண்டு** வினாக்களுக்கு விடையெழுதுதல் வேண்டும். ஒரு வினாவுக்கு **20** புள்ளிகள் வீதம் மொத்தப்புள்ளிகள் **40.**

**பகுதி II** - இப்பகுதி **ஐந்து கட்டுரை வகை** வினாக்களைக் கொண்டது. அவற்றுள் எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விடையெழுதுதல் வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் **20** புள்ளிகள் வீதம் **60** புள்ளிகள் வழங்கப்படும்.

வினாத்தாள் II இற்கு மொத்தப் புள்ளிகள் **100** ஆகும்.

இறுதிப் புள்ளியைக் கணித்தல் :

| | | |
|---|---|---|
| வினாத்தாள் I | | = 50 |
| வினாத்தாள் II | = 100 ÷ 2 | = 50 |
| இறுதிப் புள்ளி | | = 100 |

## வினாத்தாள் I

**அறிவுறுத்தல்கள்** :
* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க. பல்தேர்வு வினாக்களுக்கு விடையளிப்பதற்குரிய தாள் வழங்கப்படும்.

---

**1.** நாகரிகம் என்பது,

(1) நல்ல சீரான வாழ்க்கை வாழ்வது
(2) சமூகத்திலுள்ள வழிபாட்டு முறைகள், மரபுகளின் தொகுப்பு
(3) ஒரு யுகத்திலிருந்து இன்னொரு யுகத்திற்கு நகர்வது
(4) ஒரு சமூகத்தை இன்னொரு சமூகத்திடமிருந்து வேறுபடுத்தும் அடையாளம்
(5) ஓர் ஆட்சி முறைமை

**2.** யூதப் பண்பாடு உருவாகுவதற்கு பின்வரும் பண்பாடுகள் பங்களிப்பு நல்கின

(1) மொசப்பத்தேமியா, அசீரியா, பபிலோனியா
(2) மொசப்பத்தேமியா, உரோமை, இந்தியா
(3) அசீரியா, பபிலோனியா, இலத்தீன் அமெரிக்கா
(4) கிரேக்கம், உரோமை, இந்தியா
(5) மொசப்பத்தேமியா, உரோமை, அசீரியா

**3.** 'ஆட்சி புரிவதற்கான அதிகாரம் கடவுளிடமிருந்து வருகின்றது' எனும் கருத்தினை கொண்டிருந்த நாட்டினர்,

(1) உரோமையர்கள் (2) சீனர்கள் (3) மெசப்பத்தோமியர்கள்
(4) பாரசீகர்கள் (5) கிரேக்கர்கள்

**4.** பாலஸ்தீனாவின் மேற்கு மலைப்பகுதியில் காணப்படும் நான்கு பகுதிகள்

(1) கலிலேயா, பிலீஸ்தியா, சமாரியா, கானான்
(2) கலிலேயா, யூதேயா, கானான், நெகேப்
(3) யூதேயா, பிலீஸ்தியா, சமாரியா, கானான்
(4) கலிலேயா, சமாரியா, யூதேயா, நெகேப்
(5) சமாரியா, பிலீஸ்தியா, மோவாப், ஏதோம்

**5.** தாவீது மன்னன் குறித்த கீழ்வரும் கூற்றுக்களைக் கவனத்திற்கொண்டு அவற்றுள் சரியான கூற்றுக்களை குறிப்பிடுக.

A - சிரியாவையும் பாலஸ்தீனாவையும் இணைத்து பலமான அரசினை உருவாக்கினான்.
B - இவரது காலத்தில் உடன்படிக்கைப் பேழை ஜெருசலேமிற்கு கொண்டு வரப்பட்டது.
C - இவரது காலத்தில் ஜெருசலேத்தில் ஓர் ஆலயம் கட்டப்பட்டது.
D - கோத்திர ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து, ஜெருசலேத்தை தலை நகராக்கினான்.
E) தாவீது மன்னன் காலத்தில்.

(1) A, B, C (2) A, B, D (3) A, D, E (4) B, C, D (5) B, D, E

**6.** கீழ்வரும் கூற்றுக்களுள் இஸ்ரயேலின் வடஅரசு குறித்த **தவறான** கூற்று,

(1) ஏரோபவாம் கி.மு. 922ல் மன்னானான்
(2) இறைவாக்கினர் எலிசா பாகால் தெய்வ வழிபாட்டினை அழித்து யாவே வழிபாட்டினை மீளக்கட்டியெழுப்பினார்
(3) ஆகாப் மன்னனின் காலத்தில் இறைவாக்கினர் எலியா பணியாற்றினார்
(4) இறைவாக்கினர்கள் மீக்கா, ஆமோஸ், ஒசேயா போன்றவர்கள் வடஅரசில் பணிபுரிந்தார்கள்.
(5) வடஅரசின் மக்கள் கடவுளை ஜெருசலேமில் வழிபட்டார்கள்.

**7.** பாலஸ்தீனாவில் நடைபெற்ற கிரேக்க ஆட்சி குறித்த **தவறான** கூற்று,

(1) பாலஸ்தீன நகரங்களுக்கு கிரேக்கப் பெயர்கள் சூட்டப்பட்டன.
(2) யூதர்கள் கிரேக்க மருத்துவ முறைகளை பின்பற்றினார்கள்.
(3) கிரேக்க விளையாட்டுத் திடல்கள் பாலஸ்தீனாவில் கட்டப்பட்டன.
(4) அநேக யூதர்கள் பாலஸ்தீனவை விட்டு வெளியேறி கிரேக்கத்தில் குடியேறினார்கள்.
(5) கிரேக்க ஆட்சியினைத் தொடர்ந்து அரசியல் அதிகாரம் தலைமைக் குருக்களால் வழங்கப்பட்டது.

**8.** பழைமையான கிறிஸ்தவ திருவிழாக்கள்,

(1) ஈஸ்டர், பெந்தகோஸ்து பெருவிழா (2) ஈஸ்டர், கிறிஸ்மஸ் பெருவிழா
(3) பெந்தகோஸ்து, கிறிஸ்மஸ் பெருவிழா (4) கிறிஸ்மஸ், விண்ணேற்றப் பெருவிழா
(5) விண்ணேற்றம், ஈஸ்டர் பெருவிழா

**9.** ஆரம்பக்கால துறவிகளின் மூன்று பிரதான பண்புகள்,

(1) அமைதி, நோன்பு, வேலை (2) அமைதி, செபம், குழும வாழ்வு
(3) அமைதி, செபம், நோன்பு (4) செபம், வேலை, பொது வாழ்வு
(5) தியானம், வேலை, பொது வாழ்வு

**10.** பெனடிற் ஒழுங்கு முறையினைப் பின்பற்றி உருவான துறவற சபை

(1) சிஷ்ரேசியன் (2) ரப்பீட்ஸ் (3) கார்மேல் (4) வின்சன்சியன் (5) கப்புச்சியன்

**11.** ஆரம்ப கால கிறிஸ்த குழுமத்தின் மூன்று பண்புகள்

(1) ஒற்றுமை, நோன்பு, செபம்
(2) ஒற்றுமை, நோன்பு, பகிர்வு
(3) ஒற்றுமை, பகிர்வு, திருப்பயணங்கள்
(4) ஒற்றுமை, நோன்பு, திருப்பயணங்கள்
(5) ஒற்றுமை, செபம், பகிர்வு

**12.** செசரியாவின் நகரிலுள்ள நூற்றுவர் தலைவனாகிய கொர்னேலியுவின் மனமாற்றமானது,

(1) யூதர்களை கோபத்திற்குள்ளாக்கியது
(2) யூத மற்றும் புறவின கிறிஸ்தவர்களுக்கிடையில் முரண்பாட்டினை தோற்றுவித்தது
(3) பல புறவினத்தார்கள் மனம்மாறுவதற்கான வழியினை திறந்து விட்டது
(4) சவுலால் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட வழிகோலியது
(5) உரோமை ஆட்சியாளர்களின் கோபத்திற்கு வழிசமைத்தது

**13.** ஜெருசலேம் சங்கம் கூட்டப்பட்டமைக்கான பிரதான காரணம் யாதெனில்,

(1) கிறிஸ்தவத்தை புறவினத்தாருக்கு எடுத்துச் சென்றமை
(2) புறவினத்தார்கள் கிறிஸ்தவத்திற்கு மனமாற்றப்பட்டபோது விருத்தசேதனம் செய்தமை
(3) நற்செய்தி அறிவிப்புப் பணியில் யூதர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டமை
(4) கிரேக்கக் கைம்பெண்களுக்கு தருமச்செயல்கள் செய்யப்பட்டமை
(5) பவுலுக்கும், பர்னபாவுக்கும் இடையிலான கருத்து முரண்பாடு

**14.** பவுலின் மனமாற்றமானது,

(1) சமாரியாவுக்கான பாதையில் நடைபெற்றது
(2) தமஸ்குவுக்கான பாதையில் நடைபெற்றது
(3) ஜெருசலேமிற்கான பாதையில் நடைபெற்றது
(4) எபேசில் நடைபெற்றது
(5) பிலிப்பி நகர் தொழுகைக்கூடத்தில் நடைபெற்றது

**15.** தியாடாரே சார்டேன் குறித்த **தவறான** கருத்து...

(1) இயேசு சபையினர்
(2) புதைபடிம, புவியியல் வல்லுனர்
(3) ஓர் அறிவாளி
(4) பீகீங் மனிதனை கண்டு பிடித்தவர்
(5) ஒமேகா புள்ளியே கிறிஸ்துவில் வரலாற்றின் நிறைவு என்று எழுதியவர்

**16.** அல்பர்ட் அயின்ஸ்டைன் குறித்த சரியான கூற்று...

(1) சார்பியல் கோட்பாட்டினை முன்வைத்தார்
(2) கடவுள் நம்பிக்கையற்றவர்
(3) நம்பிக்கை குறித்து குழப்பத்திற்கு உள்ளாகியிருந்தார்
(4) இயற்பியல் அறிஞரல்ல
(5) புவியீர்ப்புக் கொள்கையினை கண்டுபிடித்தார்.

**17.** புனித அகுஸ்தீனார் குறித்த கீழ்வரும் கூற்றுக்களை கவனத்திற் கொள்க.

A - அவர் மிகப்பெரிய இலத்தீன் திருச்சபையின் தந்தையாவர்.
B - பாவ அறிக்கை - அவர் எழுதிய மிகமுக்கியமான புத்தகமாகும்.
C - மனமாற்றத்திற்கு முன்பு அவர் மனிக்கேய முறையினை பின்பற்றினார்.
D - புனித ஜெரோம் அவரது ஆசிரியராவார்.
E - அவர் அரிஸ்டோட்டலின் தத்துவவியலைப் பின்பற்றினார்.

இவற்றுள் அவர் குறித்த சரியான கூற்றுக்கள் முறையே,

(1) A, B, C (2) A, B, D (3) A, C, D (4) B, C, D (5) B, C, E

**18.** கீழ்வரும் கூற்றுக்களுள் புனித தோமாஸ் அக்குவினாஸ் குறித்த சரியான கூற்றுக்கள் அடங்கிய விடை,

(1) டொமினிக்கன் சபைக் குருவானவர், இறையியலாளர், திருச்சபை வரலாறு குறித்த அறிஞர்
(2) இறையியலாளர், ஸ்கொலாஸ்ரிக்க முறையை அறிமுகம் செய்தவர், திருச்சபை வரலாறு குறித்த அறிஞர்
(3) டொமினிக்கன் சபைக் குருவானவர், பிளேட்டோவின் தத்துவவியலை பின்பற்றியவர், இறையியலாளர்,
(4) இறையியலாளர், ஸ்கொலாஸ்ரிக்க முறையை அறிமுகம் செய்தவர், டொமினிக்கன் சபைக் குருவானவர்,
(5) டொமினிக்கன் சபைக் குருவானவர், திருச்சபை வரலாறு குறித்த அறிஞர், பிளேட்டோவின் தத்துவவியலை பின்பற்றியவர்,

**19.** யூப்பிரடீஸ் - தைகிறீஸ் நாகரீகம் பற்றிய சரியான கூற்றுக்களைக் கண்டு பிடிக்குக.

A - தற்போதைய ஈராக் நாடு மொசப்பத்தோமியா என்று அழைக்கப்பட்டது.
B - இங்கு கணிதம், மருத்துவம், வானசாஸ்திரம் வளர்ச்சி பெற்றிருந்தது.
C - மொசப்பத்தேமியாவின் அரசன் முழுப் பிரதேசத்தையும் ஆட்சி செய்தான்
D - விவசாயமும், மிருக வளர்ப்பும் இப்பிரதேசத்தின் பிரதான வாழ்வாதராமாகக் காணப்பட்டன
E - மகா அலெக்ஸ்சாண்டர் இதனை ஆட்சி செய்தான்

(1) A, B, D (2) A, C, D (3) B, C, D (4) B, D, E (5) C, D, E

**20.** குடும்ப வாழ்வு குறித்த தூய பவுலின் மூன்று படிப்பினைகள்,

(1) கணவன் மனைவிக்கிடையிலான உறவு கிறிஸ்து திருச்சபையுடன் கொண்டுள்ள உறவுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது, கிறிஸ்து திருச்சபையை அன்பு செய்ததுபோல கணவன் தன் மனைவியை அன்புசெய்ய வேண்டும், மனைவி கணவனுக்கு பணிந்திருக்க வேண்டும்.
(2) கணவன் மனைவிக்கிடையிலான உறவு கிறிஸ்து திருச்சபையுடன் கொண்டுள்ள உறவுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது, கிறிஸ்துவில் ஆணும், பெண்ணும் சரிசமமானவர்கள், கணவன் மாத்திரமே தன் மனைவியை விலக்கிவிட முடியும்.
(3) கணவன் மனைவிக்கிடையிலான உறவு கிறிஸ்து திருச்சபையுடன் கொண்டுள்ள உறவுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது, கிறிஸ்து திருச்சபையை அன்பு செய்ததுபோல கணவன் தன் மனைவியை அன்புசெய்ய வேண்டும், கிறிஸ்து திருச்சபையின் தலைவராக இருப்பதுபோல கணவனே மனைவியின் தலைவன்.
(4) கணவன் மனைவிக்கிடையிலான உறவு கிறிஸ்து திருச்சபையுடன் கொண்டுள்ள உறவுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது, கணவனும், மனைவியும் அந்தஸ்தில் சமமானவர்கள் அல்ல, கிறிஸ்து திருச்சபையின் தலைவராக இருப்பதுபோல கணவனே மனைவியின் தலைவன்.
(5) கிறிஸ்து திருச்சபையை அன்பு செய்ததுபோல கணவன் தன் மனைவியை அன்புசெய்ய வேண்டும், கிறிஸ்து திருச்சபையின் தலைவராக இருப்பதுபோல கணவனே மனைவியின் தலைவன், கணவனும், மனைவியும் அந்தஸ்தில் சமமானவர்கள் அல்ல.

**21.** மொசப்பத்தோமிய நாகரிகம் பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருத்திற் கொள்க,

A - இவர்கள் பொருளாதாரம் விவசாயத்திலும், விலங்கு வளர்ப்பிலும் தங்கியிருந்தது
B - கனவுக்கு விளக்கம் கூறும் பழக்கம் இவர்களிடம் காணப்பட்டது
C - இவர்களே முதன்முதலில் நாணயங்களைப் பயன்படுத்தினார்கள்
D - 'பைபிரஸ்' என்னும் புல்லில் எழுதினார்கள்
E - அத்திப் பழத்தை மருந்தாகப் பயன்படுத்தினார்கள்
மொசப்பத்தோமிய நாகரிகம் பற்றிய சரியான கூற்றுக்கள்

(1) A, B, C (2) A, B, D (3) A, C, D (4) B, C, D (5) C, D, E

**22.** 'ஹெல்லனிசம்' என்பது,

(1) கிரேக்க நாகரிகமும், கிழக்காசிய நாகரிகமும் இணைந்த கூட்டு
(2) கிரேக்க நாகரிகமும், மொசப்பத்தோமிய நாகரிகமும் இணைந்த கூட்டு
(3) கிரேக்க நாகரிகமும், நைல் நதி நாகரிகமும் இணைந்த கூட்டு
(4) உரோமை நாகரிகமும், கிரேக்க நாகரிகமும் இணைந்த கூட்டு
(5) மொசப்பத்தோமிய நாகரிகமும், நைல் நதி நாகரிகமும் இணைந்த கூட்டு

**23.** கிறிஸ்து பிறப்பு விழா மார்கழி 25இல் முதன்முதல் கொண்டாடப்பட்ட ஆண்டு,

(1) கி. பி. 6ஆம் ஆண்டு (2) கி. பி. 33ஆம் ஆண்டு (3) கி. பி. 366ஆம் ஆண்டு
(4) கி. பி. 325ஆம் ஆண்டு (5) கி. பி. 1054ஆம் ஆண்டு

**24.** பெந்தகோஸ்து விழா உயிர்ப்பின்...

(1) 40ஆம் நாள் கொண்டாடப்பட்டது. (2) 45ஆம் நாள் கொண்டாடப்பட்டது.
(3) 49ஆம் நாள் கொண்டாடப்பட்டது. (4) 50ஆம் நாள் கொண்டாடப்பட்டது.
(5) 60ஆம் நாள் கொண்டாடப்பட்டது.

**25.** ஜேர்மனியின் திருத்தூதர் என்று அழைக்கப்பட்டவர்,

(1) புனித கொலம்பா (2) புனித பற்றிக் (3) புனித பொனிபஸ்
(4) புனித பெனடிற் (5) புனித கன்ரபெரி அகுஸ்தீனார்

**26.** எருசலேம் சங்கத்தில் **எடுக்கப்படாத** தீர்மானம்

(1) சிலைகளுக்குப் படைத்ததைத் தவிர்க்க வேண்டும்.
(2) பிற இனத்தவருடன் உணவு உண்ணக்கூடாது.
(3) கழுத்து நெரித்து உயிரிழந்த மிருகத்தை உண்பதை தவிர்க்க வேண்டும்.
(4) கழுத்து நெரித்து உயிரிழந்த மிருகத்தின் இரத்தத்தைத் தவிர்க்க வேண்டும்.
(5) பரத்தமையைத் தவிர்க்க வேண்டும்.

**27.** பின்வரும் நூல்களின் பெயர்களைக் கருத்திற் கொள்க:
A - புனிதர்களின் வாழ்க்கை
B - கிறிஸ்து வழி வாழ்வு
C - அடிப்படைகள்
D - ஆன்மாவின் கீதங்கள்
E - கிறிஸ்துவின் வாழ்க்கை
இவற்றுள் புனித இஞ்ஞாசியாரின் ஆன்மீக மறுமலர்ச்சிக்கு ஊற்றுக்களாய் அமைந்தவை,

(1) A, B (2) A, E (3) B, C (4) C, D (5) D, E

**28.** மன்னன் சார்லமென் ஆயர்களுக்கு வழங்கிய முக்கிய ஆணை,

(1) வைகிங்குகளின் படைகளைக் கைது செய்யும்படி
(2) தங்கள் பேராலயங்களுக்கு அருகாமையில் கதீற்றல் பாடசாலைகளை ஆரம்பிக்கும்படி
(3) ஐரோப்பிய இனக்குழுக்களை மதம் மாற்றும்படி
(4) பிரபுக்கள், செல்வந்தர் பிள்ளைகளுக்கு உயர்கல்வி வழங்கும்படி
(5) குருக்களை ஆசிரியர்களாக நியமிக்கும்படி

**29.** ‘இழந்த இன்பவனம்’ எனும் நூலை எழுதியவர்,

(1) ஜோன் பனியன் (2) செலானோ தோமஸ் (3) ஜோன் மில்ரன்
(4) டான்ரே அலிகியேரி (5) தோமஸ் ஆ கெம்பிஸ்

**30.** மன்னார் மறைசாட்சிய நிகழ்வு இடம்பெற்ற காலம்

(1) கி. பி. 1520 (2) கி. பி. 1544 (3) கி. பி. 1560 (4) கி. பி. 1564 (5) கி. பி. 1568

**31.** கீழ்வரும் கூற்றுக்களைக் கவனத்திற் கொள்க:
A - மைக்கல் ஆஞ்சலோ சிறந்த சிற்பியும், ஓவியருமாவார்
B - சிஸ்ரயின் தேவாலயத்தின் உட்கூரையில் ‘உலகப்படைப்பு’ ஓவியத்தை வரைந்தார்
C - ‘கதிரை மாதா’ இவர் வரைந்த சிறப்பான ஓவியமாகும்
D - ‘இறுதித்தீர்ப்பு’ ஓவியத்தையும் வரைந்துள்ளார்
E - இவர் ‘தெய்வீக ஓவியர்’ என அழைக்கப்படுகிறார்.
மைக்கல் ஆஞ்சலோ குறித்த சரியான கூற்று,

(1) A, B, C (2) A, B, D (3) A, D, E (4) B, C, D (5) C, D, E

**32.** வண. பிலிப் பல்தேயுஸ் பற்றிய பொருத்தமற்ற கூற்றை இனங்காண்க,

(1) ஒல்லாந்த இராணுவத்தினருக்குப் பணியாற்ற காலிக்கு அனுப்பப்பட்டார்
(2) யாழ்ப்பாணத்தில் கல்வின் மதத்தைப் பரப்ப பெரும் முயற்சிகளை மேற்கொண்டார்
(3) மறையைப் பரப்ப சுதேச மொழியினைக் கற்றார்
(4) தமிழ் மொழியில் பல துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டார்
(5) பணியின்போது கொலரா நோயினால் பீடிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் இறந்தார்

**33.** கிறிஸ்தவ நாகரிகத்தில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்திய நாகரிகங்களாக விளங்குபவை

(1) சுமேரிய, பாரசீக, அசீரிய நாகரிகங்கள்
(2) யூத, கிரேக்க, உரோமைய நாகரிகங்ள்
(3) அசீரிய, பபிலோனிய, சுமேரிய நாகரிகங்கள்
(4) யூத, பாரசீக, சுமேரிய நாகரிகங்கள்
(5) உரோமைய, மொசப்பத்தோமிய, அசீரிய நாகரிகங்கள்

**34.** 'வுல்காத்தா' எனப்படுவது,

(1) திருவிவிலியத்தின் இலத்தீன் மொழிபெயர்ப்பு
(2) கிரேக்க மெய்யியல் நூல்கள்
(3) திருவிவிலியத்தின் எபிரேய பிரதிகள்
(4) திருச்சபைத் தந்தையரின் ஆக்கங்கள்
(5) திருவிவிலியத்தின் கிரேக்க மொழிபெயர்ப்பு

**35.** கிரேக்க மொழியில் எழுதப்பட்ட விவிலியப் புத்தகங்கள்

(1) தொடக்கநூல், விடுதலைப்பயணம்
(2) சாலமோனின் ஞானம், லூக்கா நற்செய்தி
(3) ஆமோஸ், எசாயா நூல்கள்
(4) இணைச்சட்டம், உரோமையருக்கு எழுதப்பட்ட மடல்
(5) 1, 2 மக்கபேயர், இனிமைமிகு பாடல்

**36.** கீழ்வருவனவற்றுள் பொருத்தமற்ற தொடர்பினை கண்டு பிடிக்குக

A - கற்றோரின் மொழி - இலத்தீன்
B - கிரேக்க மெய்யியல் - நொஸ்டிக்கம்
C - மொசப்பத்தோமிய நாகரிகம் - கலாசாரத்தின் தொட்டில்
D - மசரோடிக் - யூத வேதநூலாகிய கிரேக்க திருவிவிலியம்
E - திருத்தூதர் பணி நூல் - மத்தேயு நற்செய்தியாளர்

(1) A, B, C (2) A, D, E (3) B, C, D (4) B, D, E (5) C, D, E

**37.** எருசலேமின் அரசன் ரெகபேயாம் பின்வரும் கோத்திரங்களை ஆட்சி செய்தான்

(1) ரூபன், யூதா (2) தான், நெப்தலி (3) ஆசேர், லேவி
(4) யூதா, பெஞ்சமின் (5) காத்து, பெஞ்சமின்

**38.** பாலஸ்தீனாவில் எப்போது, எம்மன்னனின் காலத்தில் பரிசேயர், சதுசேயர் என்கின்ற சமயப் பிரிவினர் தோன்றினர்,

(1) கி. மு. 200இல், எகிப்திய தளபதி தாலமி என்பவரின் காலத்தில்
(2) கி. மு. 63இல், உரோமைய மன்னன் நீரோ என்பவரின் காலத்தில்
(3) கி. மு. 200இல், சிரிய மன்னன் 3ம் அந்தியோக்கு என்பவரின் காலத்தில்
(4) கி. மு. 333இல், கிரேக்க பேரரசன் மகா அலெக்ஸ்சாண்டர் என்பவரின் காலத்தில்
(5) கி. மு. 597இல், பபிலோனிய மன்னன் நெபுகத்னேசர் என்பவரின் காலத்தில்

**39.** தாவீது மன்னனாக முடிசூட்டப்பட்ட இடம்,

(1) கப்பர்நாகூம் (2) நயீம் (3) நசரேத்து (4) எப்ரோன் (5) பெத்தானியா

**40.** கீழ்வரும் கூற்றுக்களைக் கவனத்திற் கொள்க:

A - லூத்தரின் படிப்பினையை ஏற்றுக்கொண்டு, அவர் லூத்தரின் நெறியினை பின்பற்றினார்
B - புரட்டஸ்தாந்து திருச்சபைகளின் தலைமையமாக ஜெனிவாவை ஏற்படுத்தினார்
C - கிறிஸ்து நற்கருணையில் உறையவில்லை, நற்கருணை அதுவொரு நினைவு உணவு மாத்திரமே
D - ஏற்கனவே தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் மாத்திரமே விண்ணகம் செல்வர் என்றார்
E - பாப்பரசரின் அதிகாரத்தை நிபந்தனைகளின்கீழ் ஏற்றுக்கொண்டார்

இவற்றுள் கல்வினைக் குறித்த சரியான கூற்றுக்கள்

(1) A, B, C (2) A, B, D (3) A, C, E (4) B, C, D (5) C, D, E

**41.** யூத திருமண பழக்க வழக்கங்களில் உள்ளடக்கப் **படாதது,**

(1) திருமணத்திற்கு முன்பு திருமண நிச்சயார்த்தம் நடைபெறல்
(2) மணப்பெண் மணமகனின் இல்லத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படல்
(3) திருமணத்திற்கு அழைக்கப்பட்டோருக்கு திருமண ஆடை வழங்கப்படல்
(4) மணமகனுக்கு ஒரேநேரத்தில் இரு மனைவியரை வைத்துக்கொள்ள அனுமதித்தல்
(5) கணவன் மாத்திரமே தன் மனைவியை விவாகரத்து பண்ண முடியும்

**42.** கீழ்வரும் கூற்றுக்களுள் மத்தேயு ரிச்சி குறித்த **தவறான** கூற்று,

(1) ஓர் இத்தாலிய நாட்டு இயேசு சபைக் குருவானவர்
(2) சீன நாட்டிற்கு மறைபரப்பாளராகச் சென்றார்
(3) கொன்பூசியஸ் ஆசிரியர்களின் வாழ்க்கை முறையினைப் பின்பற்றினார்
(4) சீன மக்களை மதமாற்ற செய்ய முயற்சித்ததால் அங்கிருந்து விரட்டப்பட்டார்
(5) சீன மொழியில் மறைக்கல்வி நூலினைத் தொகுத்தார்

**43.** கீழ்வரும் சொற்றொடர்களில் ஒன்றோடு ஒன்று **பொருந்தாத** சொற்றொடர்,

(1) சீரோ மலபார் திருச்சபை - உரோமன் கத்தோலிக்க திருச்சபையுடன் இணைந்தது
(2) சீரோ மலங்கரா திருச்சபை - அந்தோக்கிய வழிபாட்டு முறையினை பின்பற்றுவது
(3) மார் தோமா திருச்சபை - இதற்கு அங்லிக்கன் திருச்சபையுடன் நெருங்கிய தொடர்புண்டு
(4) உரோமன் கத்தோலிக்க திருச்சபை - உரோமை வழிபாட்டு முறையினை பின்பற்றுகின்றது
(5) சீரோ மலபார் மற்றும் மலங்கரா திருச்சபைகள் - இவர்கள் திருத்தந்தைக்கு மதிப்பளித்து ஆதரவு கொடுக்கின்றார்கள்

**44.** கீழ்வரும் கூற்றுக்களைக் கவனத்திற் கொள்க:

A - கி. பி. 5ம் நூற்றாண்டில் ஜப்பானில் நொஸ்தோரிய கிறிஸ்தவர்கள் வாழ்ந்தார்கள் எனப்படுகிறது
B - இயேசு சபையினரே முதன்முதலில் ஜப்பானில் கிறிஸ்தவத்தை அறிவித்தார்கள்
C - கிறிஸ்தவ நற்செய்தியினை அறிவிக்க அரசர்கள் எப்போதும் உதவி செய்தார்கள்
D - புரட்டஸ்தாந்து மறைப்பணியாளர்கள் விவிலியத்தை ஜப்பானிய மொழியில் மொழி பெயர்த்தார்கள்
E - கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதி ஜப்பானியர்கள் கிறிஸ்தவத்தை கடைப் பிடிக்கின்றார்கள்

மேற்கூறியவற்றுள் ஜப்பான் நாட்டில் கிறிஸ்தவம் குறித்த சரியான கூற்றுக்கள்

(1) A, B, C (2) A, B, D (3) B, C, D (4) B, D, E (5) C, D, E

**45.** கி. பி. 6ஆம் நூற்றாண்டில் இலங்கையில் கிறிஸ்தவர்கள் இருந்தார்களௌன தனது நூலில் குறிப்பிடுவர்,

(1) கொஸ்மஸ் இன்டிக்கோ பிளிஸ்டஸ் (2) மார்கோ டீ போலோ
(3) கன்டபரி தோமஸ் (4) இவ்வ'ாப் அபுசாயிப்
(5) பிக்ஸ்டர் பற்றியன்

**46.** போர்த்துக்கேயர் யாருடைய தலைமையில் முதலில் இலங்கைக்கு வந்தார்கள்,

(1) கிறிஸ்டோபர் கொலம்பஸ் (2) வஸ்கோ டா காமா
(3) பிரான்சீஸ்கோ டீ அல்மேய்டா (4) பிரான்சீஸ்கோ மகலன்
(5) லொறென்ஸோ டீ அல்மேய்டா

**47.** கீழ்வரும் கூற்றுக்களுள் பிரான்சிஸ்கன் மறைபரப்பாளர்கள் குறித்த சரியான கூற்றுக்கள்

A - இலங்கையின் முதல் மறைபரப்பாளர்கள்
B - கிறிஸ்தவத்தைப் பரப்ப இலங்கைக்கு வந்தார்கள்
C - ஆலயங்களுக்கு அருகில் பாடசாலைகளை அமைத்தார்கள்
D - கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொள்தவர்களுக்கு ஆட்சியாளர்கள் ஊடாக தண்டனை அளித்தார்கள்
E - கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்கு சில சலுகைகள் அளிக்கப்பட்டன

(1) A, B, C (2) A, C, D (3) A, C, E (4) B, C, D (5) C, D, E

**48.** போத்துக்கேயரின் வருகையால் இலங்கைச் சமூகத்திற்கு சில தாக்கங்கள் எற்பட்டன என்பதை விளக்கும் கூற்றுக்களை கவனத்திற் கொள்க.

A - அவர்கள் திருமணங்களை பதிவு செய்தார்கள்
B - பல புதிய சொற்கள் சிங்கள மொழியில் சேர்க்கப்பட்டன
C - கல்வியில் புதிய முறைகள் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டன
D - கட்டிடக்கலையில் பாரிய விருத்தி காணப்பட்டது
E - நாட்டிலே பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டது

இவற்றுள் சரியான கூற்றுக்கள்

(1) A, B, C (2) A, B, D (3) B, C, D (4) B, C, E (5) C. D, E

**49.** அருட்தந்தை யாக்கோமே கொன்சால்வஸ் குறித்த **தவறான** கூற்று,

(1) பிராமண கோவா பட்டணக் குருவானவர்.
(2) ஓறத்தோறியன் சபையில் இணைந்து இலங்கைக்கு மறைப்பணியாளராக வந்தார்.
(3) அவரால் சிங்கள கிறிஸ்தவ இலக்கியத்தை படைக்க முடிந்தது
(4) தமிழில் இரு புத்தகங்கள் எழுதியுள்ளார்.
(5) போலவத்தை ஆலய வளவினுள் அடக்கம் பண்ணப்பட்டுள்ளார்.

**50.** கல்வி சம்பந்தமாக கீழ்தரப்படும் விடயங்களைக் கவனத்திற் கொள்க.

A - சுதேச மொழிகளில் கல்வி கற்பிக்கப்பட்டது.
B - சுதேச மொழிகளில் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் பயிற்றப்பட்டார்கள்.
C - பாடசாலை நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.
D - கல்வி நடவடிக்கைகளுக்காக ஆலயங்களுக்கருகில் மேடைகள் அமைக்கப்பட்டு நாட்டிய நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.
E - ஆண் பிள்ளைகளுக்கு மாத்திரம் கல்வி கட்டயமாக்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட கூற்றுக்களுக்குள் கல்வி சம்பந்தமாக ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட விடயங்கள் யாவை

(1) A, B, C (2) A, B, D (3) B, C, D (4) B, C, E (5) C. D, E

* * *

# (49) கிறிஸ்தவ நாகரிகம்
## வினாத்தாள் II

**அறிவுறுத்தல்கள் :**

* **பகுதி I** இல் **இரண்டு** வினாக்களையும், **பகுதி II** இல் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

---

### பகுதி I

**1.** (i) கி. பி. முதலாம் நூற்றாண்டில் பலஸ்தீனாவில் இடம்பெற்ற உரோமைய நிர்வாகம் பற்றிய நான்கு விடயங்களை எழுதுக.

(ii) ஏரோதியர் ஆட்சியின் நான்கு பண்புகளைத் தருக.

(iii) யூத தலைமைக் குருக்கள் பற்றிய நான்கு விடயங்களை எழுதுக.

(iv) யூத தலைமைச் சங்கம் பற்றிய நான்கு விடயங்களை எழுதுக.

(v) புராதன பலஸ்தீனாவில் கிரேக்க ஆட்சியின் விளைவாக ஏற்பட்ட நான்கு நன்மையான விளைவுகளைத் தருக.

(5 × 4 = 20 புள்ளிகள்)

**2.** (i) மிலான் சாசனத்தின் விளைவாகக் கிறிஸ்தவர்களுக்குக் கிட்டிய நான்கு நன்மைகளைக் குறிப்பிடுக.

(ii) ஐரோப்பிய இனக்குழுக்களுக்குப் புனித பெனடிற் துறவற சபையினர் வழங்கிய நான்கு பணிகளைக் குறிப்பிடுக.

(iii) மத்திய காலத்து ஐரோப்பியத் திருச்சபையில் காணப்பட்ட நான்கு சீர்கேடுகளைக் குறிப்பிடுக.

(iv) ஆன்மீகம் பற்றிப் புனித சிலுவை யோவான் எழுதிய நான்கு நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(v) சிலுவைப் போரினால் ஏற்பட்ட நான்கு தீய விளைவுகளைக் குறிப்பிடுக.

(5 × 4 = 20 புள்ளிகள்)

**3.** (i) புரட்டஸ்தாந்து சீர்திருத்தத்திற்கு வழிவகுத்த நான்கு காரணிகளைத் தருக.

(ii) மாட்டின் லூதரின் நான்கு படிப்பினைகளைக் குறிப்பிடுக.

(iii) புரட்டஸ்தாந்து சீர்திருத்தத்தின் விளைவாக ஏற்பட்ட நான்கு மாற்றங்களைத் தருக.

(iv) திரிதெந்தின் சங்கத்தில் எடுக்கப்பட்ட நான்கு தீர்மானங்களைத் தருக.

(v) பிரான்சியப் புரட்சியின் பின் நிறுவப்பட்ட நான்கு துறவற சபைகளின் பெயர்களைத் தருக.

(5 × 4 = 20 புள்ளிகள்)

### பகுதி II

**4.** (i) கிரேக்க, உரோமை நாகரீகங்களின் மிகச்சிறப்பான பண்புகளை விளக்குக.

(ii) இலங்கையொரு பன்மைத் தன்மையான நாடு என்னும் நிலையில், இலங்கையில் இன, மத இணக்கப்பாட்டினை ஏற்படுத்துவதில் கிரேக்க, உரோமை நாகரீகங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ளக்கூடிய படிப்பினைகள் எவை?

(2 × 10 = 20 புள்ளிகள்)

**5.** (i) மலைப்பொழிவு பற்றிச் சுருக்கமாக விபரிக்குக.

(ii) நீதியான சமுதாயத்தை நிறுவதில் மலைப்பொழிவின் மதிப்பீடுகள் கற்பிக்கும் பயன்பாட்டை விளக்குக.

(2 × 10 = 20 புள்ளிகள்)

**6.** (i) கிறிஸ்தவத்தின் முதல் மூன்று நூற்றாண்டுகள் காலத்தில் கிறிஸ்தவர்கள் எதிர்கொண்ட சவால்களை உதாரணங்களுடன் விளக்குக.

(ii) நற்செய்தி மதிப்பீடுகளின் உண்மையான சான்று வாழ்விற்கு கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ளும் சவால்களைத் தெளிவுபடுத்துக.

(2 × 10 = 20 புள்ளிகள்)

**7.** (i) இலங்கையின் கல்விக்கு இரண்டு கிறிஸ்தவத் தலைவர்கள் வழங்கிய பங்களிப்புப்பற்றி கட்டுரை வரைக.

(ii) இலங்கையின் இரண்டாம் நிலைக் கல்வி மேம்பாட்டிற்குத் திருச்சபை வழங்கக்கூடிய பங்களிப்பு பற்றிக் கட்டுரை வரைக.

(2 × 10 = 20 புள்ளிகள்)

**8.** (i) கிறிஸ்தவக் கலையின் மேம்பாட்டிற்கு மைக்கல் ஆஞ்சலோ, லியனாடோ டாவின்சி ஆகியோர் எவ்வாறான பங்களிப்புக்களைச் செய்துள்ளனர்?

(ii) ஓவியம், நாடகம் ஆகிய ஊடகங்கள் பாடசாலைக் கல்வியின் மேம்பாட்டிற்கு பயன்பட முடியும் என்பது பற்றிக் கட்டுரை வரைக.

(2 × 10 = 20 புள்ளிகள்)

* * *

இணைப்பு **01**

சுற்றுநிருப இலக்கம் **2016/13**

# க.பொ.த. (உயர்தர) பாடச் சேர்மானங்களும் பல்கலைக்கழகப் பிரவேசம் தொடர்பான பாடச் சேர்மானம்

கல்வி அமைச்சு

"இசுறுபாய", பத்தரமுல்லை

சுற்றறிக்கை இலக்கம் : 2016/13

எனது இலக்கம்:- ஈம/01/12/02/06/02–(I)
பாடசாலை செயற்பாடுகள் கிளை,
கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்லை,
2016.04.26.

மாகாண பிரதம செயலாளர்கள்,
மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
கல்விக் கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி/ உதவி கல்விப் பணிப்பாளர்கள்,
அரசாங்க மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் அதிபர்கள்.

**க.பொ.த. (உயர் தர) பாடச் சேர்மானங்களும் பல்கலைக்கழகப் பிரவேசம் தொடர்பான பாடச் சேர்மானங்களும்**

க.பொ.த. (உயர் தர) பாடச் சேர்மானங்களும் பல்கலைக்கழகப் பிரவேசம் தொடர்பான பாடச் சேர்மானங்களும் எனும் தலைப்பில் இதற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள 2009.05.18 ஆந் திகதிய 2009/16 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2010.04.21 ஆந் திகதிய 2009/16 (I) சுற்றறிக்கையின் திருத்தமும் இதற்கு ஏற்புடையதாகும் வகையில் வெளியிடப்பட்டுள்ள 2013.06.11 ஆந் திகதிய சுற்றறிக்கைக் கடிதத்தினதும் சகல ஏற்புடைமைகளையும் விஞ்சியதாக 2016 இலும் அதன் பின்பும் 12 ஆம் தரத்திற்கு அனுமதி பெறும் மாணவர்களுக்கு இச்சுற்று நிருப அறிவுறுத்தல்கள் அமுலில் இருக்கும்.

**2.0** க.பொ.த. (சாதாரண தரம்) சித்தியெய்தும் மாணவர்கள் க.பொ.த. (உயர் தர) வகுப்பில் தாம் பயில்வதற்கு எதிர்பார்க்கும் பாடத்துறையைத் தெரிவு செய்கையில், பாடங்கள் மற்றும் பாடச்சேர்மானங்கள் தொடர்பில் காணப்படும் சரியான தெளிவின்மை காரணமாக, சிக்கலான ஒரு நிலைமைக்கு முகம் கொடுக்கின்றார்கள். மேலும், பல்கலைக்கழகங்களில் தற்போது நடைமுறையில் உள்ள இளமாணிப் பட்டக் கற்கைநெறிகளுக்குத் தேவையான பாடச்சேர்மானங்கள் குறித்து மாணவர்களிடையே காணப்படும் தெளிவின்மை காரணமாகவும் பல்கலைக்கழக அனுமதியின்போது பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றார்கள். எனவே, இச்சிக்கல்களைத் தீர்ப்பதற்காகவும் மாணவர்களுக்கான ஒரு வழிகாட்டியாகவும் இந்த சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது. ஆகவே, இந்த சுற்றிக்கையில் குறிப்பிடப்படும் க.பொ.த. (உயர் தர) பாடச்சேர்மானங்களும் பல்கலைக்கழக இளமாணிப் பட்டக் கற்கைநெறிக்கான பாடச்சேர்மானங்களும் குறித்து 12ஆம் தரத்திற்கு அனுமதிக்கப்படும் சகல மாணவர்களையும் அறிவுறுத்துவது அதிபர்களின் பொறுப்பாகும்.

**3.0** க.பொ.த (உயர் தர) வகுப்புக்களில் மூன்று பிரதான பாடங்கள் கற்பிக்கப்படுவதுடன், ஒரு பாடத்துக்கென ஒரு வாரத்தில் 10 பாடவேளைகள் ஒதுக்கப்படும். இதற்கமைய, குறிப்பிட்ட விதப்புரை செய்யப்பட்ட 03 பிரதான பாடங்களுக்கும் 30 பாடவேளைகள் ஒதுக்கப்படும். எஞ்சிய 10 பாடவேளைகளில் 06 பாடவேளைகள் பொது ஆங்கிலப் பாடத்துக்காக ஒதுக்கப்பட வேண்டியதுடன், பொது தகவல் தொழில்நுட்பம் (GIT) பாடத்துக்காக 12ஆம் தரத்தில் மாத்திரம் 02 பாடவேளைகளை ஒதுக்குதல் வேண்டும். 12ஆம் தரத்தில் எஞ்சிய 02 பாடவேளைகளையும் 13ஆம் தரத்தில் எஞ்சிய 04 பாடவேளைகளையும் பாடசாலை முகாமைத்துவக் குழுவின் விருப்பத்தின் பிரகாரம் மாணவர்களது கல்வி வளர்ச்சிக்குத் துணைபுரியும் வகையில் பயன்படுத்துதல் வேண்டும்.

**4.0** விதிக்கப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மாணவர்கள் 13ஆம் தரத்தின் இறுதியில் பிரதான 03 பாடங்களுடன் பொதுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கில பாடப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பொது ஆங்கில பாடத்தில் பெறப்படும் புள்ளியோ அல்லது சித்தியோ பல்கலைக்கழக அனுமதியின்போது கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. ஆனால் குறித்த பாடத்தில் பெறப்படும் பெறுபேறு க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை பெறுபேற்றுச் சான்றிதழில் குறிப்பிடப்படும்.

## 5.0 க.பொ.த.(உயர் தர) பாடத்துறைகளுக்கான பாடச்சேர்மானங்கள்

பாடசாலைகளில் தற்போது க.பொ.த. (உயர் தர) வகுப்புகளுக்காக மூன்று பிரிவுகளின் கீழ் (கலை/ வணிகவியல், விஞ்ஞானம், தொழில்நுட்பவியல்) ஆறு (6) பாடத்துறைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

### 5.1 கலைப் பாடத்துறை

மாணவர்கள் கலைப் பாடத்துறையின் கீழ் கல்வி பயில்வதற்காக கீழே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இசைவாகப் பாடச்சேர்மானங்களைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

**5.1.1** கீழே காட்டப்பட்டுள்ள சமூக விஞ்ஞானம்/ பிரயோக சமூகக் கற்கைகள் பாடத் தொகுதியிலிருந்து (5.1.6 அ) குறைந்தது ஒரு பாடத்தையேனும் தெரிவு செய்தல் வேண்டும். (மொழிப் பாடங்கள் 02இனை அல்லது மொழிப் பாடங்கள் மூன்றினையும் தெரிவு செய்யும் மாணவர்களுக்கு இது ஏற்புடையதாகாது) மாணவரது விருப்பத்தின் பிரகாரம், இத் தொகுதியிலிருந்து இரண்டு பாடங்களையோ அல்லது மூன்று பாடங்களையுமோ தெரிவு செய்ய முடியும்.

**5.1.2** கீழே காட்டப்பட்டுள்ள சமயங்களுக்கும் நாகரீகங்களுக்குமான பாடங்களிலிருந்து (5.1.6 ஆ) யாதேனும் சமயமொன்றைத் தெரிவு செய்வதாயின், அதனுடன் தொடர்புடைய நாகரீக பாடத்தை தெரிவு செய்ய முடியாது.

**5.1.3** கீழே காட்டப்பட்டுள்ள அழகியற் கல்விப் பாடங்களிலிருந்து (5.1.6 இ) ஒரு பாடத்தை அல்லது இரண்டு பாடங்களைத் தெரிவு செய்ய முடியும்.

**5.1.4** கீழே காட்டப்பட்டுள்ள மொழிகள் பாடத் தொகுதியிலிருந்து (5.1.6 ஈ) எந்தவொரு மொழிப் பாடத்தையும் அல்லது பாடங்கள் இரண்டினையும் தெரிவு செய்ய முடியும். ஆனால், மூன்று பாடங்களையும் மொழிப் பாடங்களிலிருந்து தெரிவு செய்வதாயின், அது பின்வரும் விதத்தில் மாத்திரம் அமைதல் வேண்டும்.

- 5.1.6 (ஈ) (1) இல் குறிப்பிடப்படும் 03 பாடங்களும்
- 5.1.6 (ஈ) இல் (1) மற்றும் (2) ஆகிய இரண்டு உபதொகுதிகளிலிருந்தும் மாத்திரம் தெரிவுசெய்யப்படும் மூன்று பாடங்கள்

**5.1.5** மொழிப் பாடங்கள் இரண்டினைத் தெரிவு செய்யும் ஒரு மாணவன் தனது மூன்றாவது பாடமாக சமூக விஞ்ஞானம்/ பிரயோக சமூகக் கற்கைகள், சமயங்கள் மற்றும் நாகரீகம், அழகியற் கல்வி ஆகிய பாடத் தொகுதிகளிலிருந்து தாம் விரும்பிய ஒரு பாடத்தைத் தெரிவு செய்து கொள்ள முடியும்.

### 5.1.6 கலைப் பாடத்துறைக்கான பாடத்தொகுதிகள்

**(அ) சமூக விஞ்ஞானம்/ பிரயோக சமூக கற்கைப் பாடங்கள்**

1. பொருளியல்
2. புவியியல்
3. வரலாறு (இலங்கை வரலாற்றுடன் இந்திய வரலாறு அல்லது ஐரோப்பிய வரலாறு அல்லது நவீன உலக வரலாறு)
4. மனைப் பொருளியல்
5. அரசியல் விஞ்ஞானம்
6. அளவையியலும் விஞ்ஞான முறையும்
7. கணக்கீடு அல்லது வணிகப் புள்ளிவிபரவியல்
8. விவசாய விஞ்ஞானம் அல்லது கணிதம் அல்லது இணைந்த கணிதம்
9. தொழிட்பவியல் பாடங்களிலிருந்து ஒரு பாடம் (குடிசார் தொழில் நுட்பவியல் அல்லது பொறிமுறைத் தொழில்நுட்பவியல் அல்லது மின், இலத்திரனியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அல்லது உணவுத் தொழில்நுட்பவியல் அல்லது விவசாயத் தொழில்நுட்பவியல் அல்லது உயிர் வளத் தொழில்நுட்பவியல்)
10. தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்
11. தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம்

**(ஆ) சமயங்களும் நாகரீகங்களுக்குமான பாடங்கள்**

1. பௌத்த சமயம் அல்லது பௌத்த நாகரீகம்
2. கிறிஸ்தவ சமயம் அல்லது கிறிஸ்தவ நாகரீகம்
3. இந்து சமயம் அல்லது இந்து நாகரீகம்
4. இஸ்லாம் அல்லது இஸ்லாமிய நாகரீகம்
5. கிரேக்க மற்றும் உரோம நாகரீகம்

**(இ) அழகியற் கல்விப் பாடங்கள்**

1. சித்திரம்
2. நடனம் (தேசிய அல்லது பரதம்)
3. சங்கீதம் (கீழைத்தேய அல்லது கர்நாடக அல்லது மேலைத்தேய)
4. நாடகமும் அரங்கியலும் (சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம்)

**(ஈ) மொழிப் பாடங்கள்**

1. சிங்களம், தமிழ், ஆங்கிலம்
2. அரபு, பாளி, சமஸ்கிருதம்
3. சீனம், மலாய், பிரெஞ்சு, ஜேர்மன், ரஷியன், ஹிந்தி, ஜப்பான்

## 5.2 வணிகவியல் பாடத்துறை

இப்பாடத்துறையில் கற்பதற்கு எதிர்பார்க்கும் மாணவர்கள் கீழே குறிப்பிடப்படும் பாடங்களுள் குறைந்தது இரண்டு பாடங்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

1. கணக்கீடு
2. வணிகக் கல்வி
3. பொருளியல்

எஞ்சிய பாடத்தை கீழே குறிப்பிடப்படும் பாடங்களிலிருந்து தெரிவு செய்தல் வேண்டும்.

1. வணிகப் புள்ளிவிபரவியல்
2. புவியியல்
3. அரசியல் விஞ்ஞானம்
4. வரலாறு (இலங்கையின் வரலாற்றுடன் இந்திய வரலாறு அல்லது ஐரோப்பிய வரலாறு அல்லது நவீன உலக வரலாறு)
5. அளவையியலும் விஞ்ஞான முறையும்
6. ஆங்கிலம்
7. ஜேர்மன்
8. பிரெஞ்சு
